**Starting Time: 11.50 A.M.**

# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No. 335/2013**

Deposition of **<u>P.W.3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K.Janaki, Gr. III Bench Clerk of this court, on 04.11.2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : N. செந்தில்குமார் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>சாட்சிக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதின் பேரில், சாட்சி ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை</u>** : நான் தற்சமயம் சேலம் NCC 11 TN Signal Company பிரிவில் அவில்தாராக பணி புரிகிறேன். The Major, Madras Regiment, Nilgiris அவர்களுக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் அவரது அனுமதியுடன், ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்கிறேன். ஆவணங்களிடன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். Madras Regiment-ல் பணிபுரியும் படைவீரர்களின் ஆவணங்கள் எங்கிருக்கும் என்றால், Madras Regiment அலுவலகம் உள்ள வெலிங்க்டனில் இருக்கும். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள, முன்னால் வீரர் V. ராமு என்பவர் சம்மந்தமான 60 பக்கங்கள் கொண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவைகள் **<u>Ex.X</u>**<u>1</u> ஆகும். மேற்படி நபர் எப்போது பணியில் சேர்ந்தார், எப்போது பணியில் இருந்து ஓய்வு பெற்றார், இடையில் எப்போதெல்லாம் விடுமுறை எடுத்தார் என்ற விவரம் மேற்படி ஆவணத்தில் உள்ளது. மேற்படி ஆவணங்கள் Madras Regiment அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்களை லெப்டினல் கர்னல் சான்றொப்பம் செய்துள்ளார். Ex.X1 ஆவணங்களில் Statement of service என்ற ஒரு ஆவணம் உள்ளது. Ex.X1

ஆவணங்கள் எனது உயர் அதிகாரிகளால் கொடுக்கப்பட்டதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறேன்.

<u>**1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> நான் தற்போது எங்குள்ள அலுவலகத்தில் பணிபுரிகிறேன் என்றால், சேலத்திலுள்ள NCC அலுவலகத்தில் பணிபுரிகிறேன். மேற்படி Ex.X1 ஆவணங்களின் அசலை நான் பார்த்தேனா என்றால், இல்லை. நான் எங்கிருந்து மேற்படி ஆவணங்களை பெற்று வந்தேன் என்றால், கோயம்புத்தூரில் உள்ள தலைமை அலுவலகத்திலிருந்து பெற்று வந்தேன். மேற்படி ஆவணங்களில் உள்ள விவரங்கள் எதுவும் நேரடியாக தெரியாது என்றால், சரிதான்.

4 முதல் 9 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending time: 12.06 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**